**இமதுவ பிரதேச சபை - 2021**

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 பாதகமான அபிப்பிராயம்

இமதுவ பிரதேச சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாட்டுக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகார சட்டத்தின் உப பிரிவு 172(1) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, இமதுவ பிரதேச சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு கோட்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் வழங்கவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் பாதகமானதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பிரதேச சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பிரதேச சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

**1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

**1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | நிதி நிலைமைக் கூற்றில் 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த சொத்துக்கள் ரூபா 158,500,785 தொகையாக காணப்பட்டதுடன் ஒன்றிற்கு ஒன்று சமமாக காணப்பட வேண்டிய மொத்த உரிமை மற்றும் பொறுப்புக்கள் ரூபா 205,161,320 தொகையாக காணப்பட்டமையால் ரூபா 46,660,535 இற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது. | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ii) | 2021.12.31 திகதியில் உள்ளவாறு பரீட்சை மீதியில் அடங்கியுள்ள நிதி நிலைமைக் கூற்றில் உட்படுத்தப்படாத ரூபா 153,475 இற்கான 08 கணக்கு மீதிகள் காணப்பட்டது. | | |
| (iii) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கையிருப்பு ரூபா 793,357 தொகையாக காணப்பட்டதுடன், அது நிதி நிலைமைக் கூற்றில் ரூபா 4,678,150 தொகை என ரூபா 3,884,793 தொகையினால் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது. | | |

(iv) 2021.12.31 திகதியில் உள்ளவாறு நிதி நிலைமைக் கூற்றில் காசும் காசுக்கு சமமானவைகளும் ரூபா 11,621,711 தொகையாக இருக்க வேண்டிய போதிலும் அவை ரூபா 15,120,159 தொகை என ரூபா 3,498,448 தொகை மிகையாக காட்டப்பட்டிருந்தது.

(v) 2021.12.31 திகதியில் உள்ளவாறு ரூபா 27,008,792 தொகைக்கான கடன்கொடுத்தோர் மீதி ஒன்று நடைமுறை பொறுப்புக்களின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

(vi) மீளாய்வாண்டின் பற்றாக்குறை ஆகிய ரூபா 6,114,242 தொகை திரட்டிய நிதியக் கணக்கிற்கு சீராக்கல் மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன், 2021.12.31 திகதியில் உள்ளவாறு தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் தொடர்பான கூற்றில் 2021.01.01 திகதியில் உள்ளவாறு மீதி ரூபா 37,146,498 தொகை ஆகக் காணப்பட வேண்டியிருந்ததுடன், அது ரூபா 30,942,786 தொகை என ரூபா 6,203,712 தொகை குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(vii) 2021.12.31 திகதியில் உள்ளவாறு தேறிய சொத்துக்கள் மாற்றங்கள் கூற்றில் காலப்பகுதிக்கான மிகை ரூபா 6,114,242 தொகைக்கு பதிலாக ரூபா 6,016,721 தொகை மூலதன செலவீட்டிற்கான அரசிறை உதவு தொகை கணக்கிற்கு சீராக்கல் செய்திருந்ததுடன், ஆண்டிற்கான மூலதன மானியம் என ரூபா 2,283,962 தொகை மற்றும் முன்னைய ஆண்டிற்கான சீராக்கல்கள் ரூபா 5,565,337 தொகை சீராக்கல் செய்து ரூபா 123,782,602 தொகை என 2021.12.31 திகதியில் உள்ளவாறு மீதி எடுக்கப்பட்டிருந்ததுடன் இந்த எண்ணிக்கைகள் போலியான எண்ணிக்கைகள் என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(viii) பொதுப் பேரேட்டில் வரவு பதிவு ஒன்று ஏற்பட்டிருந்ததை வரவுப் பதிவுக்கான செலவுப் பதிவு ஒன்று பொதுப் பேரேட்டில் உட்படுத்தப்படாமல் கூட்டுத்தொகை ரூபா 2,013,808 இற்கான 04 கணக்கு விடயங்கள் காணப்பட்டது.

சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன்.

சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| (ix) | பொதுப் பேரேட்டில் 07 கணக்குகளின் கூட்டுத்தொகை ரூபா 4,993,016 தொகைக்காக வரவுப் பதிவுகள் செய்யப்பட்டிருந்ததுடன், அதற்குரிய செலவுப் பதிவுகள் பொதுப் பேரேட்டில் உட்படுத்தப்பட்டிருக்காததுடன், பொதுப் பேரேட்டில் 21 கணக்குகளின் கூட்டுத்தொகை ரூபா 19,750,478 தொகைக்கான செலவுப் பதிவுகள் பதியப்பட்டிருந்ததுடன் அதற்குரிய வரவுப் பதிவுகள் பொதுப் பேரேட்டில் உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. அதே போல் வரவுக்கு அல்லது செலவுக்கு கணக்குகளில் உட்படுத்தப்பட்ட ரூபா 24,743,494 தொகை பெறுமதிக்குரிய தகவல்கள் சபையில் காணப்படவில்லை. | | |
| (x) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பொதுப் பேரேட்டில் 28 வருமானச் செலவுக் கணக்கு விடயங்களிற்கான வருமானச் செலவுக் கணக்குகளில் சீராக்கல் செய்ய வேண்டிய பெறுமதி ரூபா 59,918,334 தொகை எனினும் அதனை ரூபா 56,058,767 தொகை என ரூபா 3,859,567 இற்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது. | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (xi) | மீளாய்வாண்டின் போது ரூபா 1,379,517 தொகைக்கான காணி மற்றும் கட்டிட விடயங்கள் 07 இன் பெறுமதி ரூபா 808,297 பெறுமதியான இயந்திர மற்றும் இயந்திர உபகரண விடயங்கள் 14 இன் பெறுமதியும் ரூபா 596,115 இற்கான தளபாடங்கள் மற்றும் பொருத்துக்கள் 04 வகையான விடயங்களின் பெறுமதி மூலதனப்படுத்தியிருக்கவில்லை. | | |
| (xii) | மீளாய்வாண்டின் போது அப்புறப்படுத்தப்பட்டிருந்த ரூபா 1,030,000 தொகை பெறுமதியான சிங்கள் கப் வண்டி மற்றும் ரூபா 833,000 தொகை பெறுமதியான டிரக்டர் வண்டி என்பவற்றை நிதிக்கூற்றுக்களில் இருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | |
| (xiii) | மீளாய்வாண்டின் போது மின்சார இருப்புக் கொள்வனவுக் கணக்கு ரூபா 639,409 தொகை மற்றும் வழங்கல்கள் ரூபா 810,965 தொகை கணக்கீடு செய்திருக்கவில்லை. | | |

| | | | |
|---|---|---|---|
| (xiv) | மீளாய்வாண்டின் போது பொது களஞ்சிய இருப்புக் கணக்கு கொள்வனவு ரூபா 403,378 தொகை மற்றும் வழங்கள்கள் ரூபா 305,187 தொகை கணக்கீடு செய்திருக்கவில்லை. | | |
| (xv) | மீளாய்வாண்டின் போது நன்கொடையாக மற்றும் கொள்வனவு செய்திருந்த ரூபா 495,000 தொகை பெறுமதியான ஆயுர்வேத இருப்பு மற்றும் ஆண்டின் போது வழங்கப்பட்ட ரூபா 241,863 தொகை பெறுமதியான ஆயுர்வேத இருப்பு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | | |
| (xvi) | மீளாய்வாண்டின் போது உப அலுவலகத்தின் வியாபார வரி சிட்டையிடல் ரூபா 365,030 தொகை குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன், பல்கரும கட்டிடம் வாடகைக்கு கொடுத்தல் ரூபா 504,000 இற்கான வாடகை கணக்கீடு செய்திருக்கவில்லை. | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (xvii) | மீளாய்வாண்டின் போது ரூபா 592,390 தொகை வீதவரி ரூபா 1,472,085 தொகை என ரூபா 879,695 தொகை மிகையாகவும் சிட்டையிடப்பட்டிருந்தது. | | |
| (xviii) | மீளாய்வாண்டிற்கான பெற வேண்டிய மூலதன உதவி ரூபா 17,739,881 தொகையும் நிர்மாண வேலை கடன்கொடுத்தோர் ரூபா 18,549,125 தொகையும் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | | |
| (xix) | மீளாய்வாண்டிற்கான செலவுக் கடன்கொடுத்தோருக்காக ரூபா 1,468,297 தொகை மற்றும் கணக்காய்வுக் கட்டணத்திற்காக ஏற்பாடுகள் மேற்கொண்டிருக்கவில்லை. | | |
| (xx) | மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டிருந்த சம்பளங்கள் மற்றும் வேதனங்கள் கடன்கொடுத்தோர் ரூபா 417,326 தொகை மற்றும் ஊழியர் சேமலாப நிதிய கடன்கொடுத்தோர் ரூபா 42,140 தொகை கணக்கீடு செய்திருக்கவில்லை. | | |
| (xxi) | மீளாய்வாண்டிற்கான நிலையான வைப்புக்கள் வட்டி பெறுவனவு ரூபா 264,540 தொகை கணக்காய்வு செய்திருக்கவில்லை. | | |

| | | | |
|---|---|---|---|
| (xxii) | மீளாய்வாண்டின் போது உள்நாட்டு கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திற்கு செலுத்தப்பட வேண்டிய கடன் மீதி ரூபா 157,670 தொகை குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | | |
| (xxiii) | 2021 ஆண்டிற்காக 18 செலவு விடயங்களில் ஒன்றித்த செலவுப் பொழிப்பின் படி ரூபா 237,350,152 தொகையாக காணப்பட்டதுடன், செலவுப் பதிவேட்டில் ரூபா 22,222,217 தொகை என கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையால் ரூபா 215,127,935 இற்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது. | | |
| (xxiv) | மீளாய்வாண்டிற்கான பேரேட்டுக் கணக்கில் காட்டப்பட்டிருக்காத 06 வருமான விடயங்களின் ரூபா 5,414,018 இற்கான மீதி ஒன்று வருமானச் செலவுக் கணக்கில் சீராக்கல் செய்யப்பட்டிருந்தது. | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (xxv) | மீளாய்வாண்டின் மதிப்பிடப்பட்ட நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 1,100,000 தொகை மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 10,900,000 தொகை கணக்கீடு செய்திருக்கவில்லை. | | |
| (xxvi) | முன்னைய ஆண்டின் போது நூலகப் புத்தகங்கள் கொள்வனவு செய்யும் போது கிடைத்திருந்த கழிவு ரூபா 86,198 தொகை கணக்கீடு செய்திருக்கவில்லை. | | |
| (xxvii) | முன்னைய ஆண்டிற்கான பொது நிர்வாக நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மூலதனச் சொத்துக்கள் திருத்தங்கள் மற்றும் பராமரிப்புச் செலவு ரூபா 82,719 தொகை குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | | |

### 1.6.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள 22 கணக்கு விடயங்கள் தொடர்பான மீதிகள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய துணைப் பதிவேடுகளில் காட்டப்பட்டுள்ள மீதிகள் இடையே ரூபா 15,298,337 இற்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது. | கணக்காய்வில் சுட்டிக் காட்டப்பட்டுள்ள விடயங்களை ஏற்றுக் கொள்கின்றேன். | வித்தியாசங்களை இணங்கண்டு சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.6.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 14,489,132 தொகைக்கான 08 கணக்கு விடயங்களை திருப்திகரமாக பரிசோதனை செய்ய முடியாதிருந்தது. | மீதிகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். | நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கணக்கு மீதிகளை உறுதிப்படுத்துவதற்கான சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

### 1.7 இணங்காமை

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிக குடியரசின் நிதிப் பிரமாணம் | | | |
| நிதிப் பிரமாணம் 571(1)(2)(3) | 2013 ஜனவரி 01 திகதி முன்னர் இருந்து காணப்படும் ரூபா 3,702,956 தொகைக்கான வீட்டு வாடகை வைப்புக்கள், பலவின வைப்புக்கள், ஒப்பந்த வேலை வைப்புக்களுடன் தொடர்புடைய வைப்புச் செய்த திகதி, வைப்புச் செய்தவரின் பெயர், வைப்புச் செய்யப்பட்ட காரணம் தொடர்பான தகவல்கள் சபையில் காணப்படவில்லை. அந்த வைப்புக்கள் தொடர்பாக தகவல்களை பரிசோதனை செய்து நிதிப் பிரமாணங்களின் படி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | எதிர்காலத்தில் சரி செய்ய நடவடிக்கை எடுப்பேன். | நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி 2021 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 12,130,963 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 11,871,849 தொகையாக இருந்தது.

**2.2 வருமான நிருவாகம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வீதவரியும் வரியும் | | |
| | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 541 வீதவரி அலகுகளில் இருந்து ரூபா 936,097 தொகை காணப்பட்டதுடன், அவற்றில் 05 வருடங்களுக்கு முன்னர் இருந்து காணப்படும் 48 வீதவரி அலகுகளில் இருந்து ரூபா 292,051 இற்கான மீதி ஒன்று உட்படுத்தப்பட்டிருந்தது. | அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | பெற வேண்டிய மீதிகளை அறவீடு செய்ய வேண்டும். |
| (ஆ) | வியாபார வரி | | |
| | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய வியாபார வரித் தொகை ரூபா 908,920 தொகையாக காணப்பட்டதுடன், அவற்றில் 03 வருடங்களுக்கும் 05 வருடங்களுக்கும் இடைப்பட்ட காலம் முதல் நிலுவையாக காணப்பட்ட ரூபா 177,450 இற்கான மீதி ஒன்றும் உட்படுத்தப்பட்டிருந்தது. | | |